## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.**

CC.No.92-2016 **L.W.7** P.W.6

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜதுரை | Caste | |
| Father/Husband Name | அண்ணாதுரை | Calling | |
| Village | நெடுங்குளம் | Religion | |
| Taluk | திட்டக்குடி | Age | 37 |
| District | கடலூர் | Time | 11.40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 01.02.2024 நாளாகிய இன்று திரு.அன்பு பி.எ., பி.எல்., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்.

**எதிரிகள் மூவரும் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் நெடுங்குளத்தில் வசித்து தற்போது வழக்கறிஞராக பணியாற்றி வருகிறேன். எனக்கு அசா1 முதல் 5, பட்டியல் சாட்சி செல்வராஜ் மற்றும் ஆஜர் எதிரிகள் மூவரையும் தெரியும். ஆஜர் எதிரிகள் என் உறவுக்காரர்கள் ஆவார்கள். கடந்த 2014 வருடம் அசா1 ராஜவேலுக்கும், ஆஜர் எதிரிகள் மூவருக்கும் அதாவது ஆஜர் 1வது எதிரி அசா1விற்கு பெரியப்பா முறை ஆவார். அவர்களுக்குள் சண்டை நடந்ததால் என்னுடைய சொந்த வேலை சம்மந்தமாக திட்டக்குடி காவல் நிலையத்திற்கு ஒரு புகார் கொடுப்பதற்காக சென்று இருந்தேன். அந்த சமயத்தில் திருப்பதியில் உள்ள அம்பேத்கர் சட்டக்கல்லூரியில் மூன்றாண்டு படிப்பில் இரண்டாவது ஆண்டு படித்து கொண்டு இருந்தேன். அப்போது தான் தற்போது சமூக நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ 3** ஆகும். என்னுடன் அந்த பார்வை மகசரில் அசா5 செந்தில் குமாரரும் கையொப்பம் போட்டார். போலீசார் என்னை விசாரிக்கும் போது மேற்சொன்ன சம்பவத்தை தான் கூறினேன்.

**கற்றறிந்த அரசு வழக்கறிஞர் சாட்சி முன்னிலையில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு தேதி, நேரம் சம்பவ இடத்தை பொறுத்து போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்து விட்டு தற்சமயம் மறைத்து சாட்சியம் அளிப்பதால் பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரினார். அனுமதிக்கப்பட்டு சாட்சி சட்ட பிரிவு 154 (1)–ன் கீழ் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1. கடந்த 27.04.2014 தேதி மாலை 6 மணிக்கு நானும் அசா5 செந்தில்குமாரும் எங்கள் ஊர் அய்யனார் கோயில் முன்னால் நின்று பேசிக்கொண்டு இருந்ததாகவும் போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால்? இல்லை.

2. அப்போது திட்டக்குடி உதவி ஆய்வாளர் அங்கு வந்து எங்கள் இருவரிடம் சம்பவத்தை அதே இடத்தில் வைத்து போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால்? இல்லை. காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள்.

3. மேற்சொன்ன சம்பவ இடத்தில் எங்கள் இருவர் முன்னிலையில் மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்து அந்த பார்வை மகசரில் நாங்கள் இருவரும் அதே இடத்தில் வைத்து சாட்சி கையெப்பம் போட்டு விட்டு தற்போது ஆஜர் எதிரிகள் உறவுக்காரர்கள் என்பதால் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால்? இல்லை உண்மையை தான் சொல்கிறேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் காவல் நிலையத்தில் ஏற்கனவே வரைந்து இருந்த மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசரில் தான் கையொப்பம் செய்தேன் என்றால்? சரிதான். நான் சொந்த வேலையின் தான் காவல் நிலையம் சென்றேன்.

TYPED TO MYDICTATION OPENCOURT
INPRESENCE OF ACCUSED READOVER
TO THE DEPONENT AND ADMITTED BY
HIM/HER TO BE CORRECT

JUDICIAL MAGISTRATE,
THITTAGUDI